(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 30.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2024 யூன் 18, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

3/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஒவ்வொரு வருடமும் அதிக வறட்சியான காலநிலை நிலவும் காலப்பகுதிகளில் கண்டி, பன்வில மற்றும் உடுதும்பரை பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசங்கள் உட்பட மத்திய மலைநாட்டின் பல பிரதேசங்களிலுள்ள ஒதுக்குக் காடுகளையும் நீரேந்துப் பிரதேசங்களையும் சார்ந்த காடுகளும் சிறிய பற்றைக் காடுகளும் தீ வைக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) அதன் காரணமாக நீர் ஊற்றுக்கள் வற்றிப்போதல், மழை காலங்களில் மலை உச்சிகளிலுள்ள கற்கள் புரளுதல் மற்றும் மண்சரிவுகள் ஏற்படுதல் போன்ற சேதங்கள் ஏற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி தீ வைப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) வெப்பமான காலநிலையுடன் வேகமாகப் பரவும் தீயை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உணர்திறன் வாய்ந்த சூழல் தொகுதியைப் பாதுகாப்பதற்காக நிலைபேறான தீர்வு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

41/2024

கௌரவ புத்திக பத்திறண,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் 1948.02.04 ஆம் திகதியின் பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட ஆட்களின் மரணச் சான்றிதழ்களை உறவினர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் பிரதம அமைச்சர் கௌரவ எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களை படுகொலை செய்தமை தொடர்பில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட தல்துவே சோமாராம தேரரின் மரணச் சான்றிதழ் இதுவரையிலும் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) 1962.07.06 ஆம் திகதி தல்துவே சோமாராம தேரர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டாலும், அத்திகதியில் அப்பெயரில் மரணமொன்று பதிவு செய்யப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) தல்துவே சோமாராம தேரரின் மரணச் சான்றிதழ் வழங்கப்படாமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் தீர்மானம் யாதென்பதையும்;

(iii) இன்றேல், விசாரணையொன்று மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படாத வேறு நபர்களும் உள்ளனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

311/2024

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி, குருவிட்ட, போபத் எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணத்தை அறவிடும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அதனூடாக மேற்படி நிறுவனம் ஈட்டும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வருமானத்தைப் பயன்படுத்தி நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சிறுவர்களிடமிருந்து அறவிடப்படும் பணம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

358/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023.10.30 ஆம் திகதியளவில் இலங்கையில் ஊனமுற்ற ஆட்களின் எண்ணிக்கையானது 5-10, 10-15, 15-20, 20-30, 30-40 வயதுக்கு இடைப்பட்ட மற்றும் 40 இற்கு மேற்பட்ட எனும் ஒவ்வொரு வயதுப் பிரிவு, பாலினம், ஊனம் மற்றும் மாவட்டத்தின் அடிப்படையிலும்;

(ii) 5-20 வயதுக்கு இடைப்பட்ட ஊனமுற்றவர்களில் ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி பெறுவோரின் எண்ணிக்கை மற்றும் கல்வி பெறாதவர்களின் எண்ணிக்கை பாலின அடிப்படையிலும்;

(iii) 20 வயதுக்கு மேற்பட்ட ஊனமுற்றவர்களில், அரசதுறை, தனியார் துறை மற்றும் சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை பாலின அடிப்படையிலும்;

தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை, ஒட்டுமொத்த ஊனமுற்ற ஆட்களின் எண்ணிக்கையின் வீதாசாரமாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

368/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை, இலங்கையில் இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்காக விண்ணப்பித்த நபர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அவர்களில், இரட்டைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து அதனை வழங்குதல் வரையான செயன்முறைக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதி உண்டா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

371/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசாங்கம், லஸாட் - பிரான்ஸ் கம்பனியிடம் (M/S Lazards-France) நிதி ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம் கிளிபர்ட் சான்ஸ் (M/S Clifford Chance LLP) கம்பனியிடம் சட்ட ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

380/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவுக் கட்டளை விடுக்கப்படுகின்ற எரிபொருள், தரையிறக்கப்படும் இடங்களும் தரையிறக்கப்படும் முறையும் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) குழாய்கள் மூலமாக தரையிறக்கப்படுமாயின், அதற்காகப் பயன்படுத்தப்படும் குழாய்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி குழாய்த் தொகுதி செயலிழந்து அல்லது அடைப்புகளைக் கொண்டதாக இருக்குமாயின் அதனை நவீனமயப்படுத்துவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) குழாய்த் தொகுதியில் கோளாறுகள் உள்ள சந்தர்ப்பமொன்றில் எரிபொருளை கப்பலிலிருந்து தரையிறக்குவதற்காக எடுக்கப்படும் நாட்களின் எண்ணிக்கையும் குழாய்த் தொகுதி சிறப்பாக செயற்படும் சந்தர்ப்பமொன்றில் எரிபொருளை கப்பலிலிருந்து தரையிறக்குவதற்காக எடுக்கப்படும் நாட்களின் எண்ணிக்கையும் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை சாதாரணமாக கொள்வனவுக் கட்டளை விடுக்கும் எரிபொருள் கப்பல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) எரிபொருள் கப்பல் ஒன்றுக்கு தாமதக் கட்டணமாக ஒரு நாளைக்குச் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1244/2024

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலநிலை சூட்டிகை நீர்ப்பாசன கமத்தொழில் கருத்திட்டம் (CSIAP) என்ற பெயரில் கருத்திட்டமொன்று மொனராகலை மாவட்டத்தில் அமுலில் உள்ளது என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள், மேற்படி ஒவ்வொரு பிரிவிலும் அக்கருத்திட்டம் அமுல்படுத்தப் படுகின்ற காலஎல்லை, கமத்தொழில் கருத்திட்டங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் என்ற வகையில் மேற்படி ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை என்பன வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இதுவரை அமுல்படுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ள கமத்தொழில் கருத்திட்டங்களின் வகைகளும் நீர்ப்பாசன கருத்திட்டங்களின் வகைகளும் வெவ்வேறாக யாவை;

(iv) தற்போது அமுலில் உள்ள கமத்தொழில் கருத்திட்டங்களின் வகைகள் மற்றும் நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் வகைகள், மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் தற்போதைய முன்னேற்றம் மற்றும் மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தையும் நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2111/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட 14 அரசாங்க முதனிலை வணிகர்களால் 2022.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களை வெவ்வேறாகவும்;

(ii) இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் தொடர்பில் இதே முதனிலை வணிகர்களால் 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களை வெவ்வேறாகவும்;

(iii) 2022.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்த வணிகர்களால் ஈட்டப்பட்ட மொத்த மூலதன இலாபங்களையும்;

(iv) 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்த வணிகர்களால் ஈட்டப்பட்ட மொத்த மூலதன இலாபங்களையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத் தருவாரா?

(ஆ) (i) 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்த வணிகர்களால் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களில் கணிசமான அதிகரிப்பு இருந்ததா என்பதையும் அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா;

(ii) அவ்வாறெனின், அதற்கான காரணங்களையும்;

(iii) இவ்வாறு எதிர்பாராது ஈட்டப்பட்ட பெரும் இலாபத்திற்காக இந்த வணிகர்களால் செலுத்தப்பட்ட வரித் தொகையினை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2131/2024

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தெஹிவளை-கல்கிசை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய 540-பீ ஜயதிலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள விஜேசேகர மாவத்தை/வீதி என்ற பாதையின் கட்டிட எல்லையானது மேற்படி மாநகர சபையின் 2007 - 2020 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் படி வீதியின் மத்தியிலிருந்து 20 அடிகளாக காணப்பட்ட போதிலும் 2020 - 2031 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் படி மேற்குறித்த எல்லையானது 10 அடிகளாக குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2020 - 2031 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தில் மேற்குறித்த வீதியின் கட்டிட எல்லையை வீதியின் மத்தியிலிருந்து 10 அடிகளாக குறைத்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) 2020 - 2031 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் படி தெஹிவளை-கல்கிசை மாநகர சபை பிரதேசத்திற்குரிய வேறு வீதிகளின் கட்டிட எல்லைகளை முன்பிருந்ததைப் போன்றே வீதியின் மத்தியிலிருந்து 20 அடிகளாகவே பேணிச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வீதியினதும் கட்டிட எல்லையை வீதியின் மத்தியிலிருந்து 20 அடிகளாக தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி வீதியின் இருமருங்கிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட விதிகளுக்கு இசைவானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் என்ற வகையில் திருமதி ஆத்மா திலுக்ஷி ஜயரத்னவினது நடத்தை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அநுராத ஜயரத்ன அவர்களினால் 2024.02.09 திகதி பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட சிறப்புரிமை பற்றிய கேள்வி, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரின் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவினால் பரிசீலிக்கப்பட்டு அக்குழுவினால் 2024 யூன் 06 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மூலம் அக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 26(1)ஆ ஆம் பிரிவின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிக்கையிடும் பொருட்டு ஆற்றுப்படுத்தப்படுமாக

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 2348/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*2.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 01 ஆம் திகதிய 2360/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*5.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 01 ஆம் திகதிய 2360/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*6.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் உரித்துப் பதிவு தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 01 ஆம் திகதிய 2308/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 8 மற்றும் 22 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 95 மற்றும் 96 ஆம் பிரிவுகளின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி ஆக்கப்பட்டதும், 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*8.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 34 ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியல்கள் தொடர்பாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2024 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2373/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 12 ஆம் திகதிய 2366/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— *சீட்டாட்டத்* தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் *சீட்டாட்டத்* தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் *சீட்டாட்டத்* தொழில் உரிமமளித்தல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 02 ஆம் திகதிய 2369/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இங்கு உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டு வகைப்பாடு குறியீடுகள் 1404-90-93 கொண்ட HS குறியீட்டின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற I ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள அழுத்தப்படாத மற்றும் அழுத்தப்பட்ட தென்னை நார் தொடர்பில் அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள அளவின் அடிப்படையில் செஸ் வரி அறவிடப்பட வேண்டுமென்பது குறித்து, விதிக்கப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியமைக் குறித்து 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கம் கொண்ட தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 33 ஆவது பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இப் பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

**அட்டவணை**

| | | ***I ஆம் நிரல்*** | ***II ஆம் நிரல்*** |
|---|---|---|---|
| தலைப்பு இலக்கம் | கூட்டு வகைப்பாடு (HS குறியீடு) | தேங்காய் உற்பத்தி | செஸ் வரி அளவு |
| | 1404-90-93 | பதப்படுத்தப்பட்ட தென்னை நார் (அழுத்தப்பட்ட மற்றும் அழுத்தப்படாத) | கிலோ கிராம் ஒன்றுக்கு 10 சதம் |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 202 4.06.0 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2024 யூன் 4) [1].

*14.

யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பால்நிலைசார் சமத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேசத்தில் “பிரத்தியேக புடவை தயாரித்தல் வலயம்” தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மார்ச் 28 ஆம் திகதிய 2377/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 001 - நிகழ்ச்சித்திட்டம் 02 — † 2024 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதி ஆண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறேதேனும் நிதியிலிருந்து அல்லது தொகையிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பத்தின் பேரில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் எட்டாயிரத்து எழுநூற்று ஐம்பது மில்லியன் (ரூபா 8,750,000,000) ரூபாவை விஞ்சாத மேலதிக குறைமதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **செலவினத் தலைப்பு** | **001** | - | அதிமேதகு சனாதிபதி |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** | - | அபிவிருத்திச் செயற்பாடுகள் • |

| | |
|---|---|
| மூலதனச் செலவினம் | ரூ. 8,750,000,000 |
| **மொத்தச் செலவினம்** | **ரூ. 8,750,000,000** |

• கருத்திட்டம் 06 — " தேசிய முன்னுரிமைகளுக்கான தேசிய அளவிலான வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பு", நிகழ்ச்சித்திட்டம் 02 — செலவினத் தலைப்பு 001 இன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வரும் 024, 025, 026, 027, 028 மற்றும் 032 ஆகிய உப கருத்திட்டங்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் பயன்படுத்தப்படாத ஒதுக்கீடுகளை 003 ஆம் உப கருத்திட்டத்திற்கு மாற்றுவதன் மூலம் ரூபா எட்டு பில்லியன் எழுநூற்று ஐம்பது மில்லியன் மாத்திரம் (ரூ. 8,750,000,000) ஒதுக்கீடு செய்யப்படும்.

† 2024 யூன் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— ஜீ.எஸ்.எம்.பீ. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2021),— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 154(6) ஆம் பிரிவின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஜீ.எஸ்.எம்.பீ. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.02.08/2024.02.09 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.03.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*29.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— டவர் மண்டப அரங்கத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2021),— 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, டவர் மண்டப அரங்க மன்றச் சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் கீழ் 2023.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய டவர் மண்டப அரங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் நவீன பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.01.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.01.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*31.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*32.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 13 ஆம் திகதிய 2371/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2023.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து அலுவல்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.01.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

35.

மாத்தறைப் பருவம் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---